தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 065 /ந/2023
நாள் 25.04.2023

திரு. என்.பரமேஸ்வரன்,
பொள்ளாச்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
பொள்ளாச்சி நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, பேருந்து நிலையம் அருகில், கிருஷ்ணசாமி வீதி, கதவு எண். 9 என்ற முகவரியில் வசிக்கும் திரு. என்.பரமேஸ்வரன் என்பவரின் 02.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.03.2023 அன்று பெறப்பட்டு 065/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, பேருந்து நிலையம் அருகில், கிருஷ்ணசாமி வீதி, கதவு எண். 9 என்ற முகவரியில் வசிக்கும் திரு. என்.பரமேஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி நகராட்சி வருவாய் உதவியாளர் திரு.பிரபு என்பவர் எனது வீடானது 2016 ஆம் ஆண்டில் புதியதாக கட்டப்பட்டுள்ளதாக, தவறாக கணக்கிட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்தே எனது வீட்டிற்கு மட்டும் கூடுதலாக முறைகேடாக சொத்துவரி விதித்துள்ளார் என்றும்,

இது தொடர்பாக கடந்த 4 வருடங்களாக பொள்ளாச்சி நகராட்சியில் பலமுறை கடிதம் போட்டும் மற்றும் நேரடியாக சென்று பார்த்து முறையிட்டும் இன்று வரை வேண்டுமென்றே அதிகாரி செய்த தவறை மறைக்க உயரதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலத்தை கடத்தி வருகிறார்கள். நான் பலமுறை முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும், நகராட்சி குடிநீர் ஆணையத்திற்கும், தமிழ்நாடு முதன்மைச் செயலாளருக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில தகவல்

ஆணையத்திற்கும் பலமுறை தபால் மூலமாகவும், நேரடியாக சென்றும் எனது பிரச்சனைகளை எடுத்துக்கூறியும் இன்று வரை எனது பிரச்சனை தீர்க்கப்படாமல் உள்ளது.

தயவு செய்து இந்த மனுவை தீர விசாரித்து எனக்கு உரிய தீர்வை வழங்குமாறு பொள்ளாச்சி நகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் பொள்ளாட்சி நகராட்சி ஆணையாளரின் விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(3) மனுதாரரும் மற்றும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரும் 06.04.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. என்.பரமேஸ்வரன் 06.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" நான் 9, கிருஷ்ணசாமிவீதி, பொள்ளாச்சி என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். முதலில் ஓட்டுவில்லை வீட்டில் இருக்கும்போது வருடத்திற்கு ரூ.87/– மட்டும் சொத்துவரியாக செலுத்தி வந்தேன். பின்னர் 2005 ஆம் ஆண்டில் தரைதளம் 300 சதுர அடியை கொண்ட மூன்று கடைகளும், மற்றும் முதல் தளம் மற்றும் இரண்டாவது தளத்தில் 600 சதுர அடி கொண்ட குடியிருப்பு கொண்ட RCC கட்டடத்திற்கு வருடத்திற்கு ரூ.3,556/–ம் சொத்து வரி செலுத்தி வந்தேன். இந்நிலையில் 2018 ஆம் ஆண்டிலிருந்து நகராட்சியில் சொத்து வரி வசூல் செய்த வருவாய் உதவியாளர் திரு.பிரபு என்பவர், மேற்படி எனது குடியிருப்பை மறு ஆய்வு செய்து கூடுதலாக ரூ.8000/– என சொத்து வரி நிர்ணயம் செய்து ஆக மொத்தம் ரூ.12,000/– செலுத்தப்பட வேண்டுமென நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் ரூ.3,556/– மட்டும் நான் சொத்துவரியாக செலுத்தி வருகிறேன். திரு.பிரபு என்பவர், அவருக்கு கையூட்டு வழங்காத காரணத்தினால் எனக்கு மட்டும் கூடுதலாக வரிநிர்ணயம் செய்துள்ளார். எனவே நகராட்சியால் கூடுலாக விதிக்கப்பட்ட ரூ.8,000/– சொத்துவரியினை ரத்து செய்து ஏற்கனவே நான் செலுத்தி வரும் ரூ.3,556/– சொத்துவரியினை தொடர்ந்து செலுத்தி வர ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் தனது 03.04.2023 நாளிட்ட கடிதத்தில், 06.04.2023 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆய்வுக் கூட்டம் நடைபெறவிருப்பதால் தனக்கு பதிலாக மற்றொரு நகராட்சி அலுவலரை ஆஜராக அனுமதி அளிக்கும்படி கோரியிருந்ததை இம்முறைமன்ற நடுவம் ஏற்று அதன்படி அவர் சார்பாக பொள்ளாச்சி நகராட்சியின் வருவாய் ஆய்வாளராகப் பணிபுரியும் திரு.B.J.ராஜேஷ் என்பவர் 06.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது புகார் மனுவில் கடந்த 2018–ல் திரு. பிரபுராம் என்ற வருவாய் உதவியாளர் முன்தேதியில் புதிய வீடு கட்டப்பட்டுள்ளது என்று தவறாக வேண்டுமென்றே (கையூட்டு வழங்காத காரணத்தினால்) தனது வீதியில் தனக்கு மட்டும் ஏற்கனவே வரிவிதிப்பு செய்த இடத்திற்கு மீண்டும் கூடுதலாக தவறாக சொத்துவரி விதித்துள்ளதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 25.09.2017 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின்

சுற்றறிக்கையில் நகராட்சியில், பயன்பாடுகள் மாற்றம் செய்யப்பட்டுள்ள/கூடுதலாக கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கும் மற்றும் வரிவிதிப்பு செய்யப்படாத கட்டடங்களையும் கண்டறிந்து சரியான வரிவிதிப்பு செய்திட ஆணையிட்டுள்ளதன் அடிப்படையில், மனுதாரரின் வீட்டின் தரைதளத்தில் கட்டப்பட்டுள்ள மூன்று கடைகளும் நகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு, அரையாண்டு வரியாக ரூ.3,484/– (ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6,968/–) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு மனுதாரர் செலுத்தி வந்த அரையாண்டு வரியாக ரூ. 1,778/–ல் (ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,556/–) எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இந்நிலையில் மேலே கூடுதலாக விதிக்கப்பட்ட வரி தொடர்பாக பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (O.S.No. 164/2021) நாள். 12.07.2021 வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் புகார் மனுவிற்கு நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் மிக பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் பொள்ளாட்சி நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியை சேர்ந்த மனுதாரர் திரு. என்.பரமேஸ்வரன் என்பவர் தனது 02.03.2023 நாளிட்ட மனுவில் பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட தனது குடியிருப்புக்கான சொத்துவரியை நகராட்சினர் கூடுதலாக நிர்ணயம் செய்து முன்தேதியிட்டு அதாவது 2016 ஆம் ஆண்டு முதல் கணக்கிட்டு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும், தனக்கு மட்டும் கூடுதலாக சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதாக புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் குடியிருப்பு 1999 ஆம் ஆண்டு முதல் ஓட்டுவில்லை வீடு கட்டடமாக இருந்த போது அரையாண்டு வரியாக ரூ 81/– விதிக்கப்பட்டு, மனுதாரர் 2006–ல் பழைய கட்டடத்தை இடித்து கட்டிய புதிய கட்டடமான 584 சதுரஅடிக்கு அரையாண்டு வரியாக ரூ 2258 இருந்ததை மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் ரூ 1,778/– ஆக, 2007 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2017–18 ஆம் ஆண்டு unassessment and under Assessment–ன் போது, மனுதாரரின் குடியிருப்பு தரைதளம் 300 சதுர அடி கொண்ட வணிகக் கட்டடமாகவும் மற்றும் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் தலா 300 சதுர அடி என ஆக மொத்தம் 900 சதுர அடி கொண்ட கட்டடமாக கண்டறியப்பட்டதை தொடர்ந்து முன்தேதியிட்டு அதாவது 2016–17 ஆம் ஆண்டிற்கு வணிகப் பயன்பாட்டு கட்டடமான தரைதளம் 300 சதுர அடி கொண்ட கட்டடத்திற்கு 01.10.2016 முதல், அரையாண்டிற்கு ரூ 3,483/– (300 சதுர அடி x ரூ 11.61/–) ஆகவும், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் குடியிருப்பு தளமான 600 சதுர அடிக்கு ஏற்கனவே முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட அரையாண்டு வரியான ரூ 1,778/– ல் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் அதே தொகையே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மனுதாரரால் மேலே புகாராக தெரிவிக்கப்பட்ட தனது குடியிருப்புக்கு பொள்ளாட்சி நகராட்சியால் கூடுதலாக விதிக்கப்பட்ட வரி தொடர்பாக மாண்பமை பொள்ளாட்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு (ஆணை எண்.164/2021) நாள் 12.07.2021 தொடரப்பட்டு, வழக்கு தற்போது நிலுவையில் உள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3 (b)–ன்படி, முறைமன்ற நடுவர், நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் விசாரணை செய்தல் கூடாது என வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் சூழ்நிலையில், மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள பொருட்பாடானது மாண்பமை பொள்ளாச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரின் முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்க இயலாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இருப்பினும், மனுதாரரின் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை அளிக்காமல் இருந்த பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.என்.பரமேஸ்வரன்,
9, கிருஷ்ணசாமி வீதி,
பேருந்து நிலையம் அருகில்,
பொள்ளாச்சி – 642 001, பொள்ளாச்சி மாவட்டம்.

2) ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி,
பொள்ளாச்சி – 642 001, பொள்ளாச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032